# KAYALPATTINAM MUNICIPALITY

KAYALPATTINAM MUNICIPALITY COUNCIL MONTH OF MAY FORM 3

Minutes of the Meeting held on 30.10.2018

| Date of council meeting | Deceison Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 30.10.2018 | 1681 | **மன்றப்பொருள்:1**<br>சாலையோர வியாபாரிகள் வாழ்வாதாரம் பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை சட்டம் 2014 (மத்திய சட்டம் எண் 7/2014) 37-வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் சாலையோர வியாபாரிகள் வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை விதிகள் 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமை வழங்குதல் திட்டம் 2015ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் காயல்பட்டிணம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை துணை விதிகள் 2018 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்பட உள்ளது. மேலும் மேற்படி துணை விதிகளை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் தினசரி பத்திரிகையில் விளம்பரம் செய்திடவும் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திட மேற்கொள்ளும் நடவடிக்கைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி விதிகளை ஏற்படுத்த அங்கீகாரம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1682 | **மன்றப்பொருள்: 2**<br>தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2018-19ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34 அறிவிப்பு எண்.14ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த மிகக்குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது என்பதற்கிணங்க காயல்பட்டணம் நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பொதுக்கிணறு (அ) ஆழ்துளைக்கிணறு (அ) நகராட்சி நீரை ஆதாரமாகக் கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர் சவ்வூடு பரவுதல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும் செலவினத்தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.18.00இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம்) வீதம் நகராட்சயில் உள்ள 18 வார்டுகளில் தற்போது இடவசதி உள்ள 12 இடங்களில் அமைக்க ரூ.216.00 இலட்சம் (ரூபாய் இருநூற்றி பதினாறு இலட்சம்) ஆகும்.<br>இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில்நிறுவனம் /தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்த கொள்ளவும்,இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடுசெய்து கொள்ளவும் ,மின் கட்டணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும் ,நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்கவும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.<br>எனவே தற்போது இடவசதி உள்ள 12 இடங்களில் இடத்திற்கு 1வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centres) தனியார் தொழில் நிறுவனங்கள் ,தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் ,மேலும் அனுவபம் வாய்ந்த மற்றும் உரிய தொழில்நுட்ப | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | நுணுக்கங்களைக்கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் "Expression of Interest" விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் கீழ்க்கண்ட இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடையக்குடி (வார்டு எண்.1),அருணாச்சலபுரம் (வார்டு எண்.1),கற்புடையார்பள்ளிவட்டம்(வார்டு எண்.7),தீவுத்தெரு(வார்டு எண்.7),கடற்கரை பூங்கா (வார்டு எண்.8),ஓடக்கரை (வார்டு எண்.12), புதிய பேருந்து நிலைய வளாகம்(வார்டு எண்.13),பப்பரப்பள்ளி ஆடுமாடு அடிக்கும் தொட்டி வளாகம்(வார்டு எண்.13),கீழலட்சுமிபுரம் OHT வளாகம் (வார்டு எண்.14),இரத்தினாபுரி(வார்டு எண்.14),உச்சிமகாளியம்மன்கோவில் தெரு(வார்டு எண்.15) மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் செயல்படுத்தவும் இதற்கான அனுமதியினை நகராட்சி நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்களிடம் பெற்றிட நகராட்சி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |
| | 1683 | **மன்றப்பொருள்: 3**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 16வது வார்டுக்குட்பட்ட தைக்காத்தெரு சாலை மிகவும் மோசமடைந்து பொதுமக்கள் மற்றும் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் அதனை சீரமைத்து மேம்பாடு செய்து தர பொதுமக்கள் கோரியதின்படி தைக்காத்தெரு சாலையை மேம்பாடு செய்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.24.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1684 | **மன்றப்பொருள்: 4**<br>காயல்பட்டணம் நகராட்சியில் வடக்கு முத்தாரம்மன் கோவில் தெருவிற்கும் சதுக்கைத்தெருவிற்கும் இடைப்பட்ட சாலை மிகவும் மோசமான நிலையில் இருப்பதாலும் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கிவிடுவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதால் பொதுமக்கள் நலன் கருதி அச்சாலையை சிமெண்ட் பேவர் பிளாக்கல் அமைத்து மேம்பாடு செய்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1685 | **மன்றப்பொருள்: 5**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 17வது வார்டுக்குட்பட்ட காட்டுத்தைக்காத்தெரு மெய்தீன்பள்ளி பின்புறம் சாலை அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்டபடியால் மிகவும் மோசமடைந்துள்ளதால் பொதுமக்கள் நலன் கருதியும் புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்தின் குடிநீர்குழாய்கள் பதிக்கும் பணிகள் மற்றும் வீட்டுக்குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதால் அச்சாலையை சிமெண்ட் பேவர் பிளாக்கல் அமைத்து மேம்பாடு செய்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1686 | **மன்றப்பொருள்: 6**<br>காயல்பட்டணம் நகராட்சி 14வது வார்டுக்குட்பட்ட அழகாபுரி சாலை தார்ச்சாலையாக அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்டபடியால் மிகவும் மோசமடைந்துள்ளதால் பொதுமக்கள் நலன் கருதி அச்சாலையை தார்சாலையாக மேம்பாடு செய்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 22.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1687 | **மன்றப்பொருள்: 7**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 14 வது வார்டுக்குட்பட்ட எல்.ஆர்.நகர் பிரதான சாலை தார்ச்சாலையாக அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்டபடியால் மிகவும் மோசமடைந்துள்ளதால் பொதுமக்கள் நலன் கருதி அச்சாலையை தார்சாலையாக மேம்பாடு செய்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

1688

**<u>மன்றப்பொருள்:8</u>**

காயல்பட்டணம் நகராட்சி பொதுசுகாதார வாகனம், அலுவலக ஈப்பு வாகனம், குடிநீர் வாகனம்,JCB ஆகியவைகளுக்கு கீழ்க்கண்டவாறு சில்லறை செலவு செய்த வகைக்கு ஓட்டுநர் திரு.வெ.ராதாகிருஷ்ணன் என்பவரால் பில்பட்டியல் கோரப்பட்டுள்ளது.

| வ.எண் | வாகனம் எண் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | TN92B8679<br>(J.C.B) | 510/— |
| 2 | TN69S0146<br>சுவராஜ் மஸ்தா | 920/— |
| 3 | TN92A6369<br>ஈப்பு வாகனம் | 640/— |
| 4 | TN69AT2821<br>டம்பர் பிளேசர் | 250/— |
| 5 | TN69S0761<br>ஆட்டோ | 5085/— |
| 6 | TN69AY0603<br>அசோக் லைலண்ட் | 2510/— |
| மொத்தம் | | 9915/— |

மேற்படி பட்டியல் தொகை ரூ.9915/— மட்டும் ஓட்டுநர் திரு.வெ.ராதாகிருஷ்ணன் என்பவருக்கு இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு.

அனுமதிக்கப்பட்டது

1689

**<u>மன்றப்பொருள்:9</u>**

காயல்பட்டணம் நகராட்சியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் பற்றிய விபரங்கள் குறித்த விழிப்புணர்வு குறித்த நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுடைய 12.10.2018 அன்று நடந்த ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டவாறு ஸ்மைல் ஸ்டிக்கர்கள் 16000 எண்ணம் மற்றும் ஒவ்வொரு வீட்டிற்கும் வருடாந்திர காலண்டர் ஸ்டிக்கர் 16000 எண்ணம் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ்ஸ், திருச்சிராப்பள்ளி நிறுவனம் மூலம் வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.170000/— மட்டும் இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு.

அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | 1690 | **மன்றப்பொருள்:10**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் பன்றிக் காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் CRA வீடியோ கான்ப்ரன்ஸ் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டவாறு நமது நகர்ப்பகுதியில் மிக முக்கிய இடங்களில் பன்றி காய்ச்சல், டெங்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு பேனர்கள் மற்றும் விளம்பர நோட்டீஸ் அச்சடிக்கவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.25000/– மட்டும் இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1691 | **மன்றப்பொருள்:11**<br>காயல்பட்டணம் நகராட்சியில் காயல்பட்டணம் தென்பாகம் கிராமம் நில அளவை எண். 528/3பி1 – ல் அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),திருநெல்வேலி அவர்களின் தொழில்நுட்ப அனுமதி கடித நக.எண்.908/2017/திலிம3 நாள்.15.03.2018 உத்திரவின்டி அனுமதிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பார்வைக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1692 | **மன்றப்பொருள்: 12**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சி சட்டம் 1920 விதி எண். 15ன் கீழ் மேற்கொண்ட பணிகளுக்கு வழங்கப்பட்ட பட்டியல் தொடர்பான பதிவேடுகள் மன்றத்தின் பார்வைக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1693 | **மன்றப்பொருள்:13**<br>காயல்பட்டணம் நகராட்சி ஆண்டுக் கணக்குகள் முடித்து தனிநபர் மூலம் மேற்படி கணக்குகளை சரிபார்த்து உரிய கணக்குகளில் பதிவு செய்து கொடுக்கவும் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. | அனுமதிக்கப்பட்டது |

| வரிசை எண் | பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | S.Kumar, B.S.C<br>Consultancy, Kovilpatti | ரூ.32000/- |
| 2. | P.Neelachandran, B.com<br>Consultancy, Kovilpatti | ரூ.30000/- |
| 3. | S.Palani kumar,M.Com, | ரூ.35000/- |

| | | |
|---|---|---|
| | Consultancy, Kovilpatti. | |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த திரு.பி.நீலச்சந்திரன் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கவும், 2017-2018-ம் ஆண்டுக்கு ஆண்டுக்கணக்கு முடித்ததற்கான தொகை வழங்கவும் மன்ற அனுமதிக்கு.

1694

**மன்றப்பொருள்:14**

காயல்பட்டணம் நகராட்சியில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகளுக்கு டெப்பாசிட் தொகை செலுத்தப்பட்டது பணிகள் கிடைக்கப்பெறாததால் ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்ட டெப்பாசிட் தொகையினை திரும்ப வழங்குவதற்கு ஒப்பந்ததாரர்கள் மனு வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணிகள் | ஒப்பந்ததாரர் பெயர் | நாள் | தொகை(ரூ) |
|---|---|---|---|---|
| 1 | சிறுபள்ளிக்கு எதிர்புறம் தெருவில் சிமெண்ட் கல் பதிக்கும் பணி செய்தல் | திரு.எஸ்.குமரேசன் | 06.08.2015 | 4500/- |
| 2 | புதுப்பள்ளி சாலையில் சிமெண்ட் கல் பதிக்கும் பணி செய்தல் | | 06.08.2015 | 6300/- |
| 3 | கற்புடையார் பள்ளி வட்டத்தில் அமைந்துள்ள பள்ளிவாசல் சாலையில் சிமெண்ட் கல் பதிக்கும் பணி செய்தல் | | 04.11.2015 | 6000/- |
| 4 | கூலக்கடை பஜார் சாலை சிமெண்ட் கல் பதிக்கும் பணி செய்தல் | | 04.11.2015 | 8200/- |
| 5 | உச்சிமாகாளியம்மன் கோவில் சிமெண்ட் கல் பதிக்கும் பணி செய்தல் | | 04.11.2015 | 9200/- |
| 6 | வடக்கு முத்தாரம்மன் கோவில் தெரு வடக்கு பகுதி சிமெண்ட் கல் பதிக்கும் பணி செய்தல் | | 04.11.2015 | 4000/- |
| 7 | காயல்பட்டணம் நகராட்சி ரத்னாபுரியில் நியாயவிலைக்கடைக் கட்டுதல் | திரு.எஸ்.பால்ராஜ் | 22.07.2015 | 8500/- |
| 8 | மேலநெசவுத்தெரு சாலையில் சிமெண்ட் கல் பதிக்கும் பணி செய்தல் | | 06.08.2015 | 6100/- |

அனுமதிக்கப்பட்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | பிலால் பள்ளி 3வது தெருவில் சிமெண்ட் கல் பதிக்கும் பணி செய்தல் | | 04.11.2015 | 5750/- |
| 10 | கற்புடையார் பள்ளி வட்டம் தெற்குத் தெருவில் சிமெண்ட் கல் பதிக்கும் பணி செய்தல் | | 04.11.2015 | 8750/- |
| 11 | அழகாபுரி மேற்கு தெருவில் சிமெண்ட் கல் பதிக்கும் பணி செய்தல் | | 04.11.2015 | 6000/- |
| 12 | அழகாபுரி கிழக்கு தெருவில் சிமெண்ட் கல் பதிக்கும் பணி செய்தல் | | 04.11.2015 | 6000/- |
| 13 | சிவன்கோவில் தெரு மயான சாலையில் சிறு பாலம் கட்டுதல் | | 04.11.2015 | 6000/- |

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்திய காலாவதியான டெப்பாசிட் தொகையினை திரும்ப ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க அனுமதிக்கு.